# லலித் அத்துலத்முதலி மஹபொல உயர்கல்வி புலமைப்பரிசில் அறக்கட்டளை நிதியம்

# முன்மொழிவுகளுக்கான கோரிக்கை (RFP)

## தரம் மற்றும் செலவு அடிப்படையிலான தெரிவு (QCBS)

**லலித் அத்துலத்முதலி மஹபொல உயர்கல்வி புலமைப்பரிசில் அறக்கட்டளை நிதியத்தின் (LAMHESTF) இணைய அடிப்படையிலான மஹபொல புலமைப்பரிசில் கொடுப்பனவு முறைமையை வடிவமைத்தல், அபிவிருத்திசெய்தல் மற்றும் செயல்படுத்துவதற்கான ஆலோசகரைத் தெரிவுசெய்தல்**

**(ஒப்பந்த இலக்கம்: MTF/01/01/2026)**

1. மேற்கூறிய ஆலோசனை சேவைகளை வழங்குவதற்காக லலித் அத்துலத்முதலி மஹபொல உயர்கல்வி புலமைப்பரிசில் அறக்கட்டளை நிதியத்தின் சார்பில் திணைக்கள ஆலோசகர் பெறுகைக் குழு (DPCM) முன்மொழிவுகளை அழைக்கிறது. சேவைகள் பற்றிய மேலதிக விவரங்கள் RFP 05ஆம் பிரிவில் உள்ள குறிப்பு விதிமுறைகளில் (TOR) வழங்கப்பட்டுள்ளன.
2. இந்த முன்மொழிவுக்கான கோரிக்கை (RFP) தகுதியுள்ள அனைத்து ஆலோசனை நிறுவனங்களுக்கும் விடுக்கப்பட்டுள்ளது.
3. அனைத்து ஆலோசகர்களும் இந்த முன்மொழிவுக்கான கோரிக்கையுடன் இணைக்கப்பட்டுள்ள இரகசிய கூட்டுச் சதியற்ற சத்திய பிரகடனமொன்றை (Non-Collusion Affidavit) தங்கள் முன்மொழிவுகளுடன் சமர்ப்பிக்க வேண்டும்.
4. பின்வரும் வழிகாட்டுதல்களின் சமீபத்திய பதிப்பில் விவரிக்கப்பட்டுள்ள கொள்கைகளின் பிரகாரம், இந்த ஆர்வ முன்மொழிவுக் கோரிக்கையில் விவரிக்கப்பட்டுள்ள முறை மற்றும் நடைமுறைகளின் கீழ் தரம் மற்றும் செலவு அடிப்படையிலான தெரிவு (QCBS) முறையில் ஒரு ஆலோசனை நிறுவனம் தேர்ந்தெடுக்கப்படும்:

   அ) தேசிய பெறுகை ஆணைக்குழுவால் வெளியிடப்பட்ட ஆலோசகர்களின் தெரிவு மற்றும் வேலைவாய்ப்பு.
5. ஆர்வமுள்ள ஆலோசனை நிறுவனம் மேலதிக தகவல்களை பணிப்பாளர் - MTF 0718174885/ 0112685548 எனும் இலக்கங்களில் அலுவலக நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம். ஆர்வ முன்மொழிவுக் கோரிக்கை ஆவணத்தின் முழுமையான தொகுதியொன்றை 2026 செப்டெம்பர் 18ஆம் திகதி முதல் வேலை நாட்களில் மேற்கண்ட முகவரியில் அலுவலக நேரங்களில் பெற்றுக்கொள்ள வேண்டும்.
6. முன்மொழிவுகள் 2026 ஒக்டோபர் 09ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் பின்வரும் முகவரிக்கு வழங்கப்பட வேண்டும். தாமதமாக கிடைக்கும் முன்மொழிவுகள் நிராகரிக்கப்படும். 2026 ஒக்டோபர் 09ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு சமுகமளிக்க விரும்பும் ஆலோசகரின் (சேவை வழங்குனரின்) பிரதிநிதிகள் முன்னிலையில் முன்மொழிவுகள் திறக்கப்படும்.
7. அனைத்து முன்மொழிவுகளுடனும் (விலைமனு) ஆறு இலட்சம் இலங்கை ரூபாவிற்குக் (இல. ரூபா 600,000.00) குறையாத வங்கிப் பிணை வடிவிலான முன்மொழிவு (விலைமனு) பிணை முறி இருக்க வேண்டும்.
8. முன்மொழிவு முன்னோடிக் கூட்டம் (Pre-Proposal Meeting) 2026 செப்டம்பர் 25ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு மேற்கூறிய முகவரியில் இடம்பெறும்.
9. இந்த RFP பின்வரும் ஆவணங்களை உள்ளடக்கியது:

   பிரிவு 1 - அழைப்புக் கடிதம்  
   பிரிவு 2 - ஆலோசகர்களுக்கான அறிவுறுத்தல்கள் (தகவல் தாள் உட்பட)  
   பிரிவு 3 - தொழில்நுட்ப முன்மொழிவு - தரப்படுத்தப்பட்ட படிவங்கள்  
   பிரிவு 4 - நிதி முன்மொழிவு - தரப்படுத்தப்பட்ட படிவங்கள்  
   பிரிவு 5 - குறிப்பு விதிமுறைகள்  
   பிரிவு 6 - ஒப்பந்தத்தின் தரப்படுத்தப்பட்ட படிவம்

**தலைவர்**  
**ஆலோசகர் பெறுகைக் குழு,**  
**லலித் அத்துலத்முதலி மஹபொல உயர்கல்வி புலமைப்பரிசில் அறக்கட்டளை நிதியம்,**  
**8வது மாடி, CWE செயலகக் கட்டிடம்,**  
**இல. 27, வொக்ஷோல் வீதி,**  
**கொழும்பு 02.**